# 6

# இஸ்லாத்தின் கடமைகள்

ஒருமுறை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஸஹாபாக்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மனித உருவில் வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் அமர்ந்தார்கள். ‘இஸ்லாம் என்றால் என்ன?’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘இஸ்லாம் என்பது, வணங்கத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று (ஷஹாதா) சாட்சி கூறுதல், தொழுகையை நிலைநாட்டுதல், ஸக்காத் கொடுத்தல், ரமழானில் நோன்பு நோற்றல், முடியுமானவர்கள் ஹஜ் செய்தல்’ என விடையளித்தார்கள்.

இந்த ஹதீஸ் இஸ்லாத்தின் கடமைகள் ஐந்தையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. அவை பற்றி நோக்குவோம்.

### ஷஹாதா

ஷஹாதா என்பது ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்காகச் சொல்கின்ற உறுதி மொழியாகும். இதனை ஒவ்வொருவரும் தூய எண்ணத்துடன் மொழிவது இன்றியமையாததாகும். ‘லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்’ என்று கூறுவதே ஷஹாதா என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கலிமா அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொள்வதை உள்ளடக்கியுள்ளது.

ஒருவர் இக்கலிமாவை மொழிந்து இஸ்லாத்தில் நுழைவதன் மூலம் சுவர்க்கம் நுழையும் வாய்ப்பைப் பெறுகின்றார். ‘எவர் லா இலாஹ



இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறி, அதன்படி செயற்படுகின்றாரோ அவர் சுவர்க்கம் நுழைவார்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## தொழுகை

இஸ்லாம் கூறும் கடமைகளில் இரண்டாவது தொழுகையாகும். இதனை ஒரு முஸ்லிம் நாளாந்தம் ஐவேளை உரிய நேரங்களில் நிறைவேற்றுவது கடமையாகும். இது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். ‘முஸ்லிமுக்கும் காபிருக்குமிடையில் உள்ள வேறுபாடு தொழுகையை விடுவதாகும்' (புஹாரி)

ஒருமுறை இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், ‘என்னை சுவர்க்கத்தில் நுழையச்செய்யும் ஓர் இபாதத்தைச் சொல்லித்தாருங்கள்' எனக்கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ‘அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். தொழுகையை நிலை நாட்டுங்கள்' எனக் கூறினார்கள். (புஹாரி)

## ஸக்காத்

இஸ்லாம் கூறும் கடமைகளுள் மூன்றாவது ஸக்காத் ஆகும். இது வசதி படைத்த ஒவ்வொரு முஸ்லிமும் தமது செல்வத்திலிருந்து ஒரு பகுதியை ஸக்காத் பெறத் தகுதியுடைய கூட்டத்தினருக்கு வழங்குவதைக் குறிக்கும். இதன் மூலம் செல்வம் தூய்மையடைகின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யமன் நாட்டுக்கு முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை கவர்னராக அனுப்பிய போது, ஸக்காத்தின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில்..

‘அல்லாஹ் ஸக்காத்தைக் கடமையாக்கியுள்ளான். அது செல்வந்தர் களிடமிருந்து பெறப்பட்டு ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டும்’ எனக் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## நோன்பு

அல்லாஹ்வால் விதிக்கப்பட்டுள்ள நான்காவது கடமை நோன்பு ஆகும். ஒவ்வொரு முஸ்லிமும் வருடாந்தம் ரமழான் மாதம் குறிப்பிட்ட நேரம் வரை உண்ணாமலும், பருகாமலும், நோன்பை முறிக்கும் ஏனைய காரியங்களில் ஈடுபடாமலும் நன்மையை எதிர்பார்த்து அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்ற லாகும். நோன்பின் மூலம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; சுவனம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

‘யார் ரமழான் மாதத்தில் ஈமானோடும் நற்கூலியை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றாரோ, அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும்’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புஹாரி முஸ்லிம்)

## ஹஜ்

இஸ்லாம் விதித்துள்ள கடமைகளுள் ஐந்தாவது, ஹஜ் ஆகும். வசதிவாய்ப்பும் தேகாரோக்கியமும் உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தமது



வாழ்நாளில் ஒருமுறை இக்கடமையை நிறைவேற்றுவது கட்டாயமாகும். இதன் மூலம் அவரது பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டு அன்று பிறந்த குழந்தையைப் போன்று பரிசுத்தமடைகிறார்.

'ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தைத் தவிர வேறு சன்மானம் இல்லை' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

இக்கடமைகள் ஒவ்வொன்றுக்குமிடையில் பரஸ்பர தொடர்புகள் காணப்படுகின்றன. அவற்றை நிறைவேற்றுவதால் தனி மனிதனுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பு வலுப்பெறுகின்றது. எனவே இஸ்லாம் கூறும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றி அல்லாஹ்வின் அன்பையும் திருப்பொருத்தத்தையும் பெற்றுக்கொள்வோமாக.

**பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. இஸ்லாம் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் விளக்கம் கேட்டவர் யார்?
2. தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு ஹதீஸைக் குறிப்பிடுக.
3. செல்வத்தைத் தூய்மையாக்கும் கடமை எது?
4. பர்ளான நோன்பு எந்த மாதத்தில் நோற்கப்படும்?
5. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு அல்லாஹ்வால் வழங்கப்படும் சன்மானம் யாது?